**PW.2** ஜே.விக்டோரியா

14-07-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் மனுதாரர் ஜெயராணியை எனக்கு நன்றாகத் தெரியும். இந்த வழக்கில் எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் அவரைப்பற்றி தெரியும் என்பதால் நான் சாட்சியம் அளித்துள்ளேன். நானும், மனுதாரர் ஜெயராணியும் அருகருகே வசித்து வருகிறோம். மனுதாரர் வசிப்பது வாடகை வீடுதான். கடந்த 19 வருடங்களாக மனுதாரர் அந்த வீட்டில்தான் வாடகைக்கு குடியிருந்து வருகிறார். மனுதாரர் ஜெயராணிக்கு நான் உறவினர் இல்லை. ஆனால் நாங்கள் இருவரும் தூத்துக்குடி மாவட்டம், மணலூரை சேர்ந்தவர்கள். அதனால் அவரை எனக்கு நன்றாக தெரியும். கோயமுத்தூர் மனுதாரருக்கு உறவினர்கள் இருக்கிறார்கள். மனுதாரரின் மகள் விக்டோரியா மகப்பேறுக்காக கோயமுத்தூர் வந்து குழந்தை பிறந்தபின் ஐந்து மாதங்கள் கோயமுத்தூரில்தான் அவரது அம்மாவுடன் இருந்தார். விக்டோரியாவை மீண்டும் அவரது கணவர் வீட்டில் விட்டுவர நானும் மனுதாரருடன் தூத்துக்குடிக்குச் சென்றேன். விக்டோரியாவை அழைத்துக் கொண்டு 2014 ல் தூத்துக்குடிக்குச்

சென்றோம். ஆனால் அதை எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். விக்டோரியாவை நாங்கள் அழைத்துச் சென்றதாக சொல்லும் சமயத்தில் விக்டோரியாவின் குழந்தையையும் வீட்டிற்குள் அனுமதிக்காமல் பணம், நகை கேட்டு சண்டையிட்டது சம்மந்தமாக நானோ, மனுதாரரோ காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. நான் முதல் சாட்சியத்தில் கூறியதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விக்டோரியாவை தூத்துக்குடிக்கு அழைத்துச் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் உறவினர்கள் கோயமுத்தூரில் இருந்தும் அவர்கள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத நிலையில் வழக்கில் வலுச்சேர்க்க என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

ஒம்/ஜே.விக்டோரியா,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.